தினமணி

பயிர் மகசூல் அறுவடை விழா

First Published : 09 Jul 2012 09:26:27 AM IST

திண்டுக்கல், ஜூலை 8: ஒட்டன்சத்திரம் வட்டம், சிந்தலவாடன்பட்டி கிராமத்தில் பயிர் மகசூல் போட்டி அறுவடை விழா நடைபெற்றது.

தேனி வேளாண் இணை இயக்குநர் செல்லதுரை, சமயநல்லூர்- ராஜசேகரன், நிலக்கோட்டை- கொண்டாஞ்செட்டி, பழனி- தியாகராஜன், திண்டுக்கல்- பகவதி, வேளாண் துணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விவசாயிகள் செல்வராஜ், பாலசுப்ரமணி, சின்னதுரை போட்டியில் கலந்து கொண்டனர்.

மாநிலம் மற்றும் மாவட்ட அளவில், போட்டி நடத்தப்பட்டதாக, வேளாண் அலுவலர் பாஸ்கரன் தெரிவித்தார்.

மேட்டூர் அணை நீர்மட்டம்: 77.12 அடி

First Published : 08 Jul 2012 02:06:57 PM IST

தஞ்சாவூர், ஜூலை 7: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை நிலவரப்படி 77.12 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 570 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1200 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை.

"உர விலை உயர்வை மத்திய அரசு தடுக்க வேண்டும்'

First Published : 08 Jul 2012 02:15:59 PM IST

கோவை, ஜூலை 7: உர விலை உயர்வைத் தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூரில் நடைபெற்ற உழவர் தினப் பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்:

உர தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசு அளித்து வந்த மானியங்களை ஊட்டச் சத்து சார்ந்த மானியமாக மாற்றியது காரணமாக உர விலை மூன்று மடங்கு உயர்ந்துள்ளது.
உர நிறுவனங்களே விலை நிர்ணயம் செய்ய மத்திய அரசு அனுமதி அளித்ததால் நிறுவனங்கள் கூட்டுச் சேர்ந்து விலையை உயர்த்தி லாபம் அடைந்து வருவதை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
கேரளத்தில், தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் தொழிலாளர்களை விவசாயப் பணிகளுக்குப் பயன்படுத்துகின்றனர். அவர்களுக்கு மத்திய அரசு பாதி, சம்பந்தப்பட்ட விவசாயிகள் பாதியும் கூலி வழங்கி வருவது போல் தமிழகத்திலும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.
தென்மேற்கு பருவ மழை காலதாமதம் ஏற்பட்டதால் விவசாயிகள் வாங்கிய கடன்களை மத்திய, மாநில அரசுகள் தள்ளுபடி செய்ய வேண்டும். சொட்டுநீர் பாசனத்திற்கு அனைத்து விவசாயிகளுக்கும் மானியம் வழங்க வேண்டும்.
விவசாயத்திற்கு பகல் மற்றும் இரவில் 6 மணி நேரம் என தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டும்.
தேங்காய் கொப்பரை கிலோவிற்கு ரூ.70 நிர்ணயம் செய்து கொள்முதல் செய்ய வேண்டும.
கொப்பரை தேங்காயை எண்ணெய்யாக மாற்றி, அரசு நியாய விலைக் கடையில் விற்பனை செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே போல மஞ்சள் கொள்முதல் விலையை அண்டை மாநிலங்களைப் போல குவிண்டாலுக்கு ரூ.5 ஆயிரம் வீதம் வழங்க வேண்டும், அவிநாசி- அத்திக்கடவு திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும். கால்நடை தீவனங்களை மானிய விலையில் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பவானிசாகர் நீர்மட்டம் 40.80 அடி

First Published : 08 Jul 2012 02:16:19 PM IST

ஈரோடு, ஜூலை 7: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 40.80 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி.
அணைக்கு விநாடிக்கு 567 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது.
கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.58 டி.எம்.சி.

தினமலர்
உண்மையின் உரைகல்

## தமிழகத்தில் கரும்பு சாகுபடி பரப்பளவு 40 சதவீதம் சரிவு

ஜூலை 09,2012,04:50



ஈரோடு:கரும்பு விலை வீழ்ச்சியால், சாகுபடி பரப்பளவு, 40 சதவீதம் வரை குறைந்துள்ளது. இதனால், சர்க்கரை விலை உயர வாய்ப்புள்ளது என, வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். திருவண்ணாமலைகரும்பு உற்பத்தியில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. தமிழகத்தில் தஞ்சை, கடலூர், திருவண்ணாமலை, வேலூர், தர்மபுரி, ஈரோடு மாவட்டங்களில் அதிக பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. கரும்பு கொள்முதல் விலை திருப்தி தராததாலும், ஆள் பற்றாக்குறையாலும், விவசாயிகள், சாகுபடி பரப்பளவை 40 சதவீதம் வரை குறைத்துள்ளனர்.

தமிழக விவசாயிகள் சங்க ஈரோடு மாவட்டத் தலைவர் பெரியசாமி கூறியதாவது:மத்திய அரசு இரண்டு ஆண்டுகளாக கரும்பு விலையை உயர்த்தாமல் உள்ளது. நாட்டின் சர்க்கரை உற்பத்தி குறைந்தும், வெளிநாட்டில் இறக்குமதி செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 2010-2011ல் தமிழகத்தில், 5.42 லட்சம் ஏக்கராக இருந்த கரும்பு சாகுபடி பரப்பளவு, 2011-2012ல், 6.5 லட்சம் ஏக்கராக உயர்ந்தது. ஆனால், கரும்பு கொள்முதல் விலை, 2,100 ரூபாய் என்ற அளவிற்கே உயர்த்தப்பட்டது.

தமிழகத்தில், 47 சர்க்கரை ஆலைகள் உள்ளன. கரும்பு உற்பத்தி சிறப்பாக இருந்தாலும், அறுவடை செய்ய வேலையாட்கள் கிடைப்பதில்லை. ஏக்கருக்கு 40 ஆயிரம் வரை உற்பத்தி செலவாகிறது.

ஆனால், கொள்முதல் விலை, 2,100 ரூபாயில், லாரி வாடகையாக, 100 ரூபாய் பிடித்துக் கொள்கின்றனர். மீதம், 2,000 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. கரும்புக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் நஷ்டத்துக்கு ஆளாகின்றனர்.இதனால், கரும்பு சாகுபடியில் விவசாயிகளுக்கு ஆர்வம் குறைந்துள்ளது. தமிழகத்தில், 40 சதவீதம் வரை கரும்பு சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது.

நடப்பாண்டு கரும்பு அறுவடை சீசன் ஓரிரு மாதங்களில் துவங்க உள்ளது.சர்க்கரை விலை:தேவை அதிகரித்துள்ள நிலையில், சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. தற்போது, நடுத்தர ரக சர்க்கரை மூட்டை (100 கிலோ) சந்தையில், 3,060 ரூபாய்க்கும், பெருவட்டு, 3,125 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இந்த விலை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு பெரியசாமி கூறினார்.

## அரசின் விதிமுறைகளால் மஞ்சள் கொள்முதல் பாதிப்பு

ஜூலை 09,2012,04:41



ஈரோடு:அரசு வகுத்துள்ள பல்வேறு விதிமுறைகளால், மஞ்சள் கொள்முதல் குறைந்து வருகிறது.கடந்த, 2010ல், மஞ்சள் விலை 17 ஆயிரம் ரூபாயாக உயர்ந்தது. இதனால் விவசாயிகள், பெருமளவில், மஞ்சள் சாகுபடியில் இறங்கினர். இதன் விளைவாக, மஞ்சள் உற்பத்தி அதிகரித்தது. இதனால் மஞ்சள் விலை குறைந்து, ஒரு குவிண்டால், 3,000 ரூபாய் முதல், 4,500 ரூபாய் வரை விற்பனையாகிறது. இந்நிலையில், அரசு, 4,000 ரூபாய் என, அறிவித்தது விவசாயிகளுக்கு அதிருப்தி அளித்துள்ளது.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:அரசு விதிமுறைப்படி மஞ்சள் ஒரு குவிண்டால், 4,000 ரூபாய் வீதம், ஒரு குடும்பத்தில் இருந்து அதிகபட்சம், 15 குவிண்டால் மட்டுமே கொள்முதல் செய்யப்படும். வருவாய்த்துறை, தோட்டக்கலைத் துறையினரால் வழங்கப்படும் அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும். சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு நகல், தரச்சான்று, உறுதிமொழிப்படிவம் போன்றவை தேவை. திரண்ட மஞ்சள் தரமாக, வெளிப்புறம் கடினமாக, இரண்டு ஆண்டுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். பாலிஷ் செய்யக்கூடாது.

மஞ்சள் ஈரப்பதம், 12 சதவீதத்துக்குள், நோய் பாதிப்பின்றி, கல், மண், மரத்தூள் கலப்பின்றி, 30 மி.மீட்டருக்கு அதிகமாக, முறிந்து போன மஞ்சள் மொத்த எடையில், 10 சதவீதத்துக்கும் குறைவாக இருக்க வேண்டும். மஞ்சள் வாசனையுடன், துர்நாற்றமின்றி, செயற்கை வர்ணம் தீட்டாமல் இருக்க வேண்டும் என, அரசு விதி கூறுகிறது.

மொத்த மஞ்சள் உற்பத்தியில், 20 முதல், 30 சதவீத மஞ்சள் கூட, இது போன்று இருக்காது. இந்த தரத்துக்கு பதம் பார்த்து, அனுப்பினால், அதற்கு அடுத்த நிலையில் உள்ள மஞ்சளை, யாரும் வாங்க மாட்டார்கள். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## வான்கோழி வளர்ப்பில் விவசாயிகள் அதிக ஆர்வம்

ஜூலை 09,2012,04:40



நாமக்கல்:குறைந்த செலவில், அதிக லாபம் தரும் வான்கோழி வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதனால், வான்கோழி கறி விற்பனை சூடு பிடித்துள்ளது.தீவனங்கள்:வான்கோழிகளை வளர்க்க விருப்பம் உள்ளவர்கள் குஞ்சுகளை வாங்கி வளர்ப்பது சிறந்தது. அவ்வாறு வளர்க்கப்படும் குஞ்சுகளுக்கு ஒரு மாதத்தில் இருந்து குதிரை மசால், வேலி மசால், சுபாபுல், கொழுக்கட்டை புல், கினியா, கோ 4, அருகம்புல், பொடுதலை, அகத்தி, கேரட், முருங்கை, சித்தகத்தி, காசினி கீரை, முயல் மசால், காராமணி, சவுண்டல், கோ எப் 29, கல்யாண முருங்கை, காய்கறி வேஸ்ட் என செலவில்லாத வகையில் தீவனங்கள் வழங்கலாம். கம்பு, சோளம், கேழ்வரகு, கடலை புண்ணாக்கு, சோயா புண்ணாக்கு, வரகு, சாமை, தினை, மக்கா சோளம், கோதுமை என பலதரப்பட்ட தானியங்களையும் அளிக்கலாம். மேலும், கரையான்களை உற்பத்தி செய்து இரண்டு மாதத்துக்கு மேற்பட்ட கோழி குஞ்சுகளுக்கு கொடுத்து வளர்க்கலாம். நன்கு வளர்ந்த பெரிய வான்கோழிகளுக்கு, ஐந்து சதுர அடி இடமும், மேய்ச்சலுக்கு, 150 சதுரடியும் தேவைப்படும். நாய், நரி, கீரி, காட்டுப்பூனை, கழுகு, வல்லூறு ஆகியவற்றில் இருந்து வான்கோழிகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

நாட்டுக் கோழி முட்டைகளுடன், வான்கோழி முட்டைகளை அடை வைக்கலாம். 28 நாளில் வான்கோழி குஞ்சுகள் பொரிந்து வெளிவரும். அப்போது முதல் அக்குஞ்சுகளுக்கு தீவனம் அளிக்க வேண்டும். புரதம் கலந்த சத்தான ஆகாரம் தேவை. அவ்வாறு அளிக்காத பட்சத்தில் அக்குஞ்சுகள் இறக்க நேரிடும்.

வான்கோழிகளை அம்மை நோய், வெள்ளைக்கழிச்சல் நோய் ஆகிய நோய்கள் தாக்க வாய்ப்பு

உள்ளது. அவ்வாறு நோய் தாக்கப்பட்ட கோழிகளுக்கு மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிச்சை அளித்தால் அந்நோயில் இருந்து கோழிகளைப் பாதுகாக்கலாம்.

வளர்ப்பு செலவு:ஒரு வான்கோழி குஞ்சு வாங்கி ஐந்து மாதம் வளர்ப்பதற்கு மொத்தச் செலவு, 650 ரூபாய் மட்டுமே ஆகும். வான்கோழிகள், ஆறு கிலோ முதல், எட்டு கிலோ வரை வளரும். அவற்றை ஒரு கிலோ, 150 ரூபாய்க்கு விற்பனை செய்தால், 200 ரூபாய் லாபம் கிடைக்கும். வான்கோழி வளர்ப்பவர்கள் குறைந்த பட்சம், 100 கோழிகளை வளர்த்தால் நஷ்டத்தை தவிர்த்து லாபத்தை பெறலாம்.

திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூரை சேர்ந்த விவசாயி பாலு கூறியதாவது:வான்கோழி வளர்ப்பில் கணிசமான லாபம் கிடைப்பதால், அவற்றை பெரும்பாலான விவசாயிகள் வளர்க்க முன் வந்துள்ளனர். கோழிகளை முறையாக வளர்த்தால், செலவு குறைவதுடன் லாபம் அதிகம் கிடைக்கும். வான்கோழியை குஞ்சுகளாக வங்கி வளர்ப்பது சிறந்தது.

புரதச்சத்து :அதற்கு தேவையான புரதச்சத்து நிறைந்த உணவு வகைகளை அளிக்க வேண்டும். ஒரு கோழி ஐந்து மாதத்துக்குள், ஆறு கிலோ எடை கொண்டிருக்கும். அதிக பட்சமாக, எட்டு கிலோ இருக்கும். தற்போது ஒரு கிலோ, 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.இந்த வான்கோழிகள் தீபாவளி, கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் மற்றும் முக்கிய விசேஷ காலங்களில் அதிக அளவில் விற்பனையாகின்றன.

ஒரு கோழிக்கு குறைந்த பட்சம், 200ம் அதிக பட்சமாக, 300 ரூபாய் லாபம் கிடைக்கிறது. அதிக அளவில் கோழிகளை வளர்த்தால் மட்டுமே நஷ்டத்தை தவிர்த்து லாபம் காணமுடியும். இவ்வாறு அவர் கூறினார்.

## சின்ன வெங்காயம் உற்பத்தி உயரும்

ஜூலை 09,2012,04:39

தர்மபுரி:இந்தியாவில், 40 சதவீத வெங்காயம் கோடை காலத்திலும், 60 சதவீதம் குளிர் காலத்திலும் உற்பத்தியாகிறது. நாட்டின் ஒட்டுமொத்த வெங்காய சாகுபடி பரப்பில் தமிழகத்தின் பங்களிப்பு 5 சதவீதமாக உள்ளது.தர்மபுரி மாவட்டத்தில் வெங்காயம் தனிப்பயிராகவும், மஞ்சளுடன் ஊடு பயிராகவும் பயிரிடப்பட்டு வருகிறது.

காரிப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட வெங்காயம் அறுவடை முடிந்து, தற்போது சந்தைக்கு வரத் துவங்கிய நிலையில், வெங்காயம் கிலோ, 15 முதல் 20 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது, விவசாயிகள் ஆடிப்பட்டத்தில் வெங்காயம் சாகுபடிக்கு நிலங்களை தயார் செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

போதிய மழையில்லாததால், இறவை பாசன பகுதியில் விவசாயிகள் வெங்காயம் சாகுபடி செய்ய

விவசாய பணிகளில் இறங்கியுள்ளனர்.கோவை வேளாண் பல்கலையில் ஆடிப்பட்ட சின்ன வெங்காயம் சாகுபடி குறித்து, விலை முன் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. கடந்தாண்டை விட இந்தாண்டு வெங்காயம் அதிக அளவில் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பூக்கள் விலை சரிவால் விவசாயிகள் கவலை**

ஜூலை 09,2012,04:36



நாமக்கல்:ஆடி மாதம் துவங்கும் முன்னரே பூக்களின் விலை சரியத் துவங்கியுள்ளது. இதனால், மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.ஆடி மாதம், திருமணம் உள்ளிட்ட சுப முகூர்த்த காரியங்கள் நடைபெறுவது குறையும் என்பதால் பூக்களின் விலையும் ஆடி மாதத்தில் இறங்கு முகமாக காணப்படுவது வழக்கம்.
வரும், 16ம் தேதி ஆடி மாதம் துவங்குகிறது.நாமக்கல் மாவட்டத்தில் ப.வேலூர் தற்காலிக பஸ் நிலையம் அருகே பெரிய அளவிலான பூ சந்தை செயல்படுகிறது. இங்கு கரூர் மாவட்டம் சேமங்கி, வேலாயுதம்பாளையம் மற்றும் நாமக்கல் மாவட்டம் ப.வேலூர், பரமத்தி உள்ளிட்ட சுற்றுவட்டாரத்தில் உற்பத்தி செய்யப்படும் பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.நாமக்கல், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று பூக்களுக்கு விலை நிர்ணயம் செய்து, அவற்றை விற்பனைக்கு எடுத்துச் செல்வர்.
இரு தினங்களுக்கு முன், 400 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ குண்டு மல்லி, நேற்றைய நிலவரப்படி, 150 ரூபாய்க்கும், 300 ரூபாய் வரை விற்பனையான முல்லைப் பூ, 200 ரூபாயாகவும், 200 ரூபாய் வரை விற்பனையான சம்பங்கி, 100 ரூபாயாகவும், 110 ரூபாய் வரை விற்பனையான அரளி, 80 ரூபாய் எனவும் சரிவடைந்துள்ளது.

## வரத்து அதிகரிப்பு: பூண்டு விலை வீழ்ச்சி

ஜூலை 09,2012,04:32



சேலம்:தமிழகத்தில் பூண்டு வரத்து அதிகரித்துள்ளதால், அதன் விலை குறைந்துள்ளது.மத்திய பிரதேசம், குஜராத், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பூண்டு விளைச்சல் அதிகமாக உள்ளது.

இம்மாநிலத்திலிருந்து, தமிழகத்திற்கு பூண்டுகள் கொண்டு வரப்படுகின்றன. கடந்த மே மாதம் வரை அதிகரித்திருந்த பூண்டு விலை, ஜூன் மாதம் திடீரென குறைந்தது. சிறிய பூண்டு ஒரு குவிண்டால், 1,700 ரூபாயில் இருந்து, 1,200 ரூபாயாக குறைந்தது.ஒரு குவிண்டால் நடுத்தர அளவிலான பூண்டு, 2,100 ரூபாயில் இருந்து, 1,600 ரூபாயாக சரிவடைந்துள்ளது. பெரிய பூண்டு, 3,000 ரூபாயில் இருந்து, 2,500 ரூபாயாக குறைந்துள்ளது.

இது குறித்து சேலம், செவ்வாய்பேட்டையைச் சேர்ந்த பூண்டு மொத்த விற்பனையாளர் பாலசங்கர் கூறியதாவது:பூண்டு விலை, ஒரு குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரை குறைந்து விட்டது. வெளிமாநிலங்களில் இந்தாண்டு பூண்டு விளைச்சல் அமோகமாக உள்ளதால், வரத்து அதிகரித்து விலை குறைந்துள்ளது.மேலும், சிங்கப்பூர், மலேசியா, வங்கதேசம், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுக்கு பூண்டு ஏற்றுமதி குறைந்து விட்டது. இதுவும் பூண்டு விலை வீழ்ச்சிக்கு காரணம். இவ்வாறு பாலசங்கர் கூறினார்.

## உரம் தட்டுப்பாடு நெற்பயிர் விளைச்சல் பாதிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 09,2012,03:46 IST

கருத்தை பதிவு செய்ய

பொன்னேரி : நெற்பயிர்களுக்கு யூரியாவுடன் சேர்த்து தெளிக்கப்படும் பொட்டாஷ் உரம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நெல் விளைச்சல் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.பொன்னேரி

மற்றும் மீஞ்சூர் சுற்றிலும் உள்ள, 200க்கும் மேற்பட்ட கிராமங்களில், 10 ஆயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் உள்ளனர். தற்போது குறுவை சாகுபடிக்காக, 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.விற்பனை மையங்கள் சம்பா, குறுவை என ஆண்டுக்கு இரண்டு முறை நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு டிஏபி, யூரியா, பொட்டாஷ், ஜிங்க் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் உள்ளிட்ட உரம் வகைகள் தேவைப்படுகின்றன. நடவுப் பணிகள் துவங்கிய காலத்திலிருந்து அறுவடை செய்யும் நிலை வரை, குறிப்பிட்ட கால இடைவெளியில் மேற்கண்ட உர வகைகள் பயன்படுத்தப் படுகின்றன.விவசாயிகளுக்கு தேவையான உர வகைகளை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்பெட்), தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்கிறது. இதற்காக பொன்னேரி மற்றும் மீஞ்சூர் பகுதிகளில், 20 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன.பொட்டாஷ் தட்டுப்பாடுநடவுப் பணிகள் முடிந்து, 30 முதல், 40 நாட்கள் வரை வளர்ந்த நெற்பயிர்களுக்கு பொட்டாஷ் உரத்துடன், யூரியாவை கலந்து தெளிக்க வேண்டும். இது ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஒரு மூட்டை யூரியாவுடன், அரைமூட்டை பொட்டாஷ் கலந்து தெளிக்கும் போது நெற்பயிர்கள் நன்கு வளரும்.தற்போது குறுவை சாகுபடிக்காக நெல் பயிரிடப்பட்டுள்ள விவசாயிகளுக்கு பொட்டாஷ் உரம் கிடைக்கவில்லை. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களிலும் பொட்டாஷ் இல்லை. உரிய கால கட்டத்தில் பொட்டாஷ் உரத்தை போடத் தவறினால் விளைச்சல் பாதிக்கும் என, விவசாயிகள் கூறுகின்றனர்.இது குறித்து பெயர் வெளியிட விரும்பாத, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க அலுவலர் ஒருவர் கூறியபோது, ""கடந்த ஓராண்டாக பொட்டாஷ் உரம் சப்ளை இல்லை. சம்பா பருவத்தின் போது, கையிருப்பில் இருந்து பொட்டாஷை விவசாயிகளுக்கு வழங்கினோம். தற்போது, ஸ்டாக் இல்லை," என்றார்.தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் காஞ்சிபுரம் கோட்ட அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, ""எங்களுக்கு விரைவில் சப்ளை வந்து விடும். உடனடியாக இங்கிருந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

## நெல் விலை திடீர் உயர்வால் விவசாயிகள் தரப்பில் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 08,2012,23:19 IST

விழுப்புரம் : நெல் விலை கிடுகிடு என உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
கடந்த ஜனவரி மற்றும் பிப்., மாதம் வரை சன்ன ரக நெல் மூட்டை (75 கிலோ) 650 ரூபாய் மற்றும் மோட்டா ரக நெல் மூட்டைக்கு 550 ரூபாய் வரை விலை போனது. அப்போது அறுவடை

செய்யப்பட்ட நெல் மூட்டைகள் அதிக வரத்து இருந்ததால் குறைந்த விலைக்கு வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.
இந்த விலை விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியால், நெல் சாகுபடியை பெரும்பாலான விவசாயிகள் தற்போது தவிர்த்து உள்ளனர். இதனால் வியாபாரிகளுக்கும், அரிசி ஆலைகள் இயங்கவும் தேவையான அளவு நெல் வரத்து இல்லாமல் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். இதனால் தற்போது சன்ன ரக நெல் மூட்டை ஆயிரத்து 100 ரூபாய் வரையும், மோட்டா ரக நெல் மூட்டை ஆயிரம் ரூபாய் வரையும் கொள்முதல் செய்யப்படுகிறது.
மேலும் மார்க்கெட் கமிட்டிக்கு நெல் வரத்து குறைந்துள்ளதால் வியாபாரிகள் விவசாயிகளிடமே சென்று நேரடியாக கொள்முதல் செய்து வருகின்றனர். விலை உயர்வு மற்றும் போக்குவரத்து செலவு குறைந்துள்ளதால், நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மஞ்சள் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 09,2012,03:34 IST

ஆத்தூர்: ஆத்தூர், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 1,500 மூட்டை மஞ்சள், 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 1,067 ரூபாய் உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், சனிக்கிழமை தோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.
நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,279 ரூபாய்க்கும், அதிகபட்சம், 6,219 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 3,389 ரூபாய்க்கும், அதிகபட்சம், 4,840 ரூபாய்க்கும் விற்பனையானது.

விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த, 1,500 மூட்டை மஞ்சள், 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனையாது.

ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 1,067 ரூபாயும், உருண்டை மஞ்சள் குவிண்டாலுக்கு, 688 ரூபாயும் விலை அதிகரித்தது.விலை உயர்வால், மஞ்சள் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## விளை நிலங்களில் ராசாயன உரம் பயன்பாடு அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 09,2012,02:02 IST

ஓசூர்; ஓசூர் தாலுகாவில் மலர் மற்றும் பயிர் சாகுபடியில், கூடுதல் மகசூல் பெற, பூச்சி கொல்லியை தடுக்க, விவசாயிகள் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட, கூடுதலாக ரசாயன மருந்து மற்றும் உரம் போடுவதால், விவசாய நிலம் உயிரற்ற தன்மையாக மாறி வருவதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் குளிர்ந்த காலநிலையும், நல்ல மண் வளமும் காணப்பட்டதால் கடந்த காலத்தில் அதிகளவு மலர்கள், காய்கறிகளை விவசாயிகள் உற்பத்தி செய்தனர்.

தற்போது, விவசாய நிலங்கள் உயிரற்ற தன்மையாக மாறி வருவதால், கடந்த காலத்தை போல் எதிர்பார்த்த மகசூல், தரமில்லாத மலர்கள், காய்கறிகள் உற்பத்தியால் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வரவேற்பு குறைந்து விவசாயிகள் நஷ்டமடைந்து வருகின்றனர்.

இதனால், படிபடியாக மாவட்டத்தில் விவசாய சாகுபடி பரபரப்பு குறைந்து வருகிறது. விவசாய நிலங்கள் ரியல் எஸ்டேட் புரோமோட்டர்களால் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு வருகின்றனர்.

பொதுவாக எல்லா மண்ணில் உயிரோட்டம் நிறைந்த நுண்ணுயிரிகள் இருக்கும்.

குறிப்பாக வண்டல் மண், செம்மண்ணில் அங்கக பொருட்கள் நிறைந்த நுண்ணுயிரிகள் செயல்பாடுகள் அதிகளவு காணப்படுவதால் மண்ணின் வளம் அதிகமாக உள்ளன. இது வேர் வளர்ச்சியை அதிகப்படுத்தி மகசூலை அதிகரிக்கும்.

அதனால் தான் செம்மண் நிறைந்த ஓசூர் தாலுகாவில் அதிகளவு மலர்கள், காய்கறிகள் உற்பத்தியாகிறது. களிமண், சரளை மண்ணில் நூண்ணூட்ட சத்துகள், அங்கக பொருட்கள் குறைவாக காணப்படும்.

மண்ணில் அங்கக சத்துகள் நுண்ணூயிர் பெருக்கம், தழைச்சத்து மணி சத்து, சாம்பல் சத்து, நுண்ணுட்டத்ததுகள் சரிவிகிதமாக இருக்க வேண்டும். மண்ணில் நுண்ணூட்டச்சத்துகளான சல்பர் கால்சியம், மக்னிசியம், ஃபோரான், மாலிப்டினம், காப்பர், மாங்கனிஸ், இரும்பு, தூத்தநாகம் ஆகிய இருக்க வேண்டும். தற்போது பயிர்களுக்கு அதிகளவு மருந்து அடிப்பதால் மண் உயிரற்ற தன்மையாகி மாறி நூண்ணூட்டசத்துக்கள் குறைவாக காணப்படுகிறது.

இது குறித்து பேரிகையை சேர்ந்த மலர் விவசாயி சிவா கூறியதாவது:வெளிநாடுகளில் காய்கறி, மலர் பயிர்களில் எந்தளவு ஹெமிக்கல், உரம் சேர்க்க வேண்டும் என்ற விதிமுறையுள்ளது.

உற்பத்தி செய்த மலர்கள், காய்கறிகளை சோதனை செய்த பின்னரே மார்க்கெட்டுகளில் விற்பனை செய்ய அனுமதிப்பார்கள். ஓசூரில் இருந்து ஏற்றுமதியாகும் ரோஜா மலர்கள், அலங்கார மலர்களை கூட சோதனை செய்தபின்தான் வாங்கி பயன்படுத்துவார்கள்.

பயிர்கள், மலர்களில் பூச்சி கொல்லி ஹெமிக்கல் மருந்துகளை பயன்படுத்துதில், விவசாயிகள்

மத்தியில் கட்டுப்பாடு, விழிப்புணர்வு இல்லை. குறிப்பாக ஒரு பயிருக்கு 0.5 எம்.எல் ஹெமிக்கல் மருந்தை ஒரு லிட்டரில் கலந்து அடிக்க வேண்டும். ஆனால், விவசாயிகள் பூச்சி கொல்லிகளை உடனடியாக சாகடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் 2 எம்.எல்., மருந்து சேர்த்து அடிக்கின்றனர். அதனால், பூச்சிகள் உடனடியாக செத்து விடுகிறது.
அதனால், அடுத்த முறை இரு எம்.எல்., க்கு மேல் மருந்து அடிக்க வேண்டிய உள்ளது. இதனால், அந்த பயிரில், மண்ணில் அந்த ஹெமிக்கல் தங்கி மண்ணின் தன்மை கெடுகிறது. மண்ணில் நோய் எதிர்ப்பு தன்மை குறைகிறது. மகசூல் குறைந்து அடுத்து அந்த மண்ணில் விவசாயம் செய்ய முடியாத அவலம் ஏற்பட்டுள்ளது.இவ்வாறு தெரிவித்தார்.

## சொட்டுநீர் பாசனம் விவசாயிகளுக்கு அழைப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 09,2012,03:33 IST

கோபிசெட்டிபாளையம்: கரும்பு சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர்பாசனம் அமைத்து தரப்படும், என வேளாண்மை துறையினர் தெரிவித்துள்ளனர்.
கோபி வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைதம்பி கூறியதாவது:தமிழகத்தில், 50 சதவீத பயிர்கள் மானாவாரியாக உள்ளன. நீர்பாசனம் பெறும் மீதி நிலங்கள் போதிய நீர்யின்மையாலும், சிக்கனமாக தண்ணீர் பயன்படுத்தாததாலும் வானம் பார்த்த பூமியாக மாறி வருகிறது. பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்தவும், சேமிக்கும் நீரை பயனுள்ள விதத்தில் பயிர்சாகுபடிக்கு பயன்படுத்துவதும் காலத்தின் கட்டாயமாகும்.
குறைந்த தண்ணீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெற, வேளாண் துறை மூலம் துல்லிய பண்ணையம், தெளிப்பு நீர்பாசனம், சொட்டு நீர் பாசனம், ரெயின் கன் பாசனம், செம்மை கரும்பு சாகுபடி போன்ற பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
கரும்பு சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு ஐந்து ஏருக்கு குறைவாக நிலம் உள்ளவர்களுக்கு, 100 சத மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்து தரப்படுகிறது. ஒரு விவசாயிக்கு ஒன்றரை ஏக்கர் வரை அதிகபட்சம், 43 ஆயிரத்து 816 ரூபாய் முழு மானியமாக வழங்கப்படுகிறது. சொட்டு நீர் பாசனம் அமைக்கவுள்ள விவசாயிகளுக்கு நீரில் கரையும் உரங்களும் இலவசமாக வழங்கப்படுகிறது.
செம்மை கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒன்றரை ஏக்கர் வரை சொட்டு நீர்பாசனமும், நீரில் கரையும் உரங்களும் இலவசமாக வழங்கப்படுகிறது.சொட்டு நீர்பாசனம் தேவைப்படும் கோபி வட்டார சிறு, குறு விவசாயிகள் கோபி வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## காலிங்கராயன் விவசாயிகள் கலந்தாய்வுக் கூட்டம்

பதிவு செய்த நாள் : ஜூலை 09,2012,03:33 IST

கருத்தை பதிவு செய்ய

கொடுமுடி: காலிங்கராயன் அணைக்கட்டு பாசனப்பகுதி நீர் மேலாண்மைத் திட்ட செயல்பாடுகள் குறித்த விவசாயிகள் கலந்தாய்வுக் கூட்டம், கொடுமுடியில் நடந்தது.

காலிங்கராயன் அணைக்கட்டு பாசனப்பகுதி நீர் மேலாண்மைத் திட்டத்தின் சார்பில் நடந்த கூட்டத்துக்கு, வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் கஜேந்திரன் தலைமை வகித்தார். காலிங்கராயன் பாசன சபை செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர் பழனிச்சாமி முன்னிலை வகித்தனர்.உதவி செயற்பொறியாளர் சுப்ரமணி வரவேற்றார்.

பாசனப் பகுதிகளில் கொப்பு வாய்க்கால்கள் அமைக்க, 7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்ட ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்தும், பாசனத்துக்கு விடப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்ட பிறகு திட்டப்பணிகளை மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆவுடையாற்பாறை, நாகமநாய்க்கன்பாளையம் உள்ளிட்ட கடைமடைப் பகுதிகளில் முதற்கட்ட திட்டப்பணிகளை செயல்படுத்தவும், 500 ஹெக்டேர் வாரியாக மதகுகள் பிரிக்கப்பட்டு, 9 பாசன கிளைச் சபைகள் அமைப்பது குறித்தும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

வேளாண் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் முருகன், இளநிலைப் பொறியாளர்கள் பாரதி, ராமன், குருசாமி, கணேசன், விஸ்வநாதன், உதவி மண்வளப் பாதுகாப்பு அலுவலர் மூர்த்தி மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## சிவப்பு எள் விதைத்தால் லாபம் விவசாயிகளுக்கு 'அட்வைஸ்'

பதிவு செய்த நாள் : ஜூலை 09,2012,04:46 IST

கரூர்: "ஆடிப்பட்டத்தில் சிவப்பு எள் விதைத்தால் விவசாயிகளுக்கு அறுவடையின் போது அதிக விலை கிடைக்கும்' என வேளாண்மை பல்கலைகழக புதுமை திட்ட உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குநர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது:முக்கிய எண்ணை வித்து பயிரான சிவப்பு எள்ளுக்கு கடந்த ராபி பருவத்தில் நல்ல விலை கிடைத்தது. பொதுவாக கரீப் பருவத்தில் வரும் எள்ளை விட ராபி பருவத்தில் நீர் பாசனத்துடன் பயிரிடப்படும் எள் தரம் நன்றாக இருக்கும். உலகளவில் இந்தியா 30 சதவீதம் எள்ளை உற்பத்தி செய்கிறது. இந்தியாவில் குஜராத், மேற்கு வங்காளம், ஒடிசா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஒரிசா ஆகிய மாநிலங்களில் எள் உற்பத்தி அதிகளவில் உள்ளது. தமிழகத்தில் விழுப்புரம், கடலூர், கரூர், ஈரோடு, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் 51 சதவீத நிலப்பரப்பில் எள் உற்பத்தியாகிறது.

வர்த்தக தகவலின்படி 70 சதவீத எள் உற்பத்தி கரீப் பருவத்தில் பயிரிடப்படுகிறது. ஆடிப்பட்டத்தில் எள் விதைத்து சாகுபடி செய்து ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில் அறுவடை செய்யப்பட்டு செப்டம்பர், டிசம்பர் மாதத்தில் சந்தைக்கு வர தொடங்கும்.கடந்தாண்டு கரீப் பருவத்தில் 29.20 லட்சம் டன்னாக எள் உற்பத்தி இருந்தது. கடந்த ராபி பருவத்தில் ஒரு குவிண்டால் எள்ளுக்கு 5,500 ரூபாய் முதல் 6,200 ரூபாய் வரை கிடைத்தது. வரும் கரீப் பருவததில் எள் சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. கரீப் பருவத்திற்கான (2012-13) எள் ஆதார விலையை குவிண்டாலுக்கு 3,400 இருந்ததை 4,200 ரூபாயாக (20 சதவீதம் அதிகம்) உயர்த்தியுள்ளது.

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் சிவகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்ொ 12 வருட விலைகளை ஆய்வு செய்தது. அதில் சிவப்பு எள் விலை சீராக இருக்கும் எனவும், வரும் செப்டம்பர் முதல் டிசம்பர் மாதம் வரை குவிண்டாலுக்கு 5,500 ரூபாய் முதல் 5,800 ரூபாய் வரை தரத்திற்கு ஏற்ப இருக்கும் என தெரிகிறது. எனவே, ஆடிப்பட்டத்தில் சிவப்பு எள்ளை விவசாயிகள் தராளமாக சாகுபடி செய்யலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ரூ.13.17 கோடியில் சொட்டு நீர் பாசனம்

பதிவு செய்த நாள் : ஜூலை 08,2012,04:08 IST

பெரம்பலூர்: விவசாய பணிகளை மேற்கொள்வது, வங்கிக்கடன் பெறுவது, விவசாயம் சார்ந்த தொழில்கள் மூலம் விவசாயிகளை பயனடைய செய்வது குறித்து விவசாயிகளுடனான கலந்துரையாடல் கூட்டம் வேப்பூர் யூனியன் அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்தில் பங்கேற்று கலெக்டர் தரேஷ்அஹமது பேசியதாவது:மாவட்டத்தின் பிரதான பயிரான சின்ன வெங்காயம் மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெறும் வகையில் முதல்வர் உத்தரவின் பேரில் அரசு மானியத்துடன் விதை மூலம் நாற்றங்கால் விட்டு பயிர் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு விவசாயிகள் அதிக லாபம் அடைந்துள்ளனர்.

விவசாயத்தில் தண்ணீர் சிக்கனத்தை மேற்கொண்டு, தற்போதுள்ள நீரைக்கொண்டு அதிக பரப்பளவில் பயிர் செய்ய 3,008 ஏக்கரில் சொட்டுநீர் பாசன கருவிகள் அமைக்க ரூ.13.17 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டு, சொட்டுநீர் பாசன கருவிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு வங்கிகள் மூலம் கடந்த ஆண்டில் விவசாயிகளுக்கு ரூ. 40 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டது. நடப்பாண்டு ரூ. 120 கோடி பயிர்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1,439 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூ. 6.78 கோடி வட்டியில்லா பயிர்கடனில், வேப்பூர் யூனியனில் 260 விவசாயிகளுக்கு ரூ. 1.83 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஆவின் மூலம் வேப்பூர் யூனியனில் 44 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 30 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

விவசாயிகளின் விளைபொருள்களுக்கு சரியான விலை கிடைக்கும் வகையில், பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் இருப்பு வைத்து விற்க, தமிழக அரசு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. இங்கு பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள், விளைப்பொருள்களை ஏலம் முறையில் வாங்குவதால் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
பயிர்களுக்கு காப்பீடு செய்வதன் மூலம் எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளிலிருந்து நஷ்டம் அடையாமல் பாதுகாத்து கொள்ள வேண்டும். பயிர் காப்பீடு குறித்த விவரங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களில் தெரிந்து கொள்ளலாம்.இவ்வாறு பேசினார்.
முன்னதாக அரசின் பல்வேறு துறைகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்தும், வரும் மாதங்களில் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய விவசாய பணிகள் குறித்தும் துறை அலுவலர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது.

## விவசாயிகளுக்கான மூலிகை பயிர் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : ஜூலை 09,2012,04:35 IST

புதுக்கோட்டை: வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கான மூலிகை பயிர்கள் சாகுபடி குறித்த தொழில்நுட்ப பயிற்சி முகாம் நாளை 10ம் தேதி நடக்கிறது.
புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் அருகில் உள்ள வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு அவ்வப்போது பயிர் சாகுபடி குறித்து தொழில்நுட்ப பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.தற்போது, மூலிகை பயிர்களுக்கு அமோக வரவேற்பு உள்ளதால் புதுக்கோட்டை மாவட்டத்தில் இவற்றின் சாகுபடியை அதிகரிக்கும் விதமாக விவசாயிகளுக்கு மூலகை பயிர்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நவீன தொழில்நுட்பங்கள் மூலம் இவற்றை சாகுபடி செய்வதற்கான வழிமுறைகள் குறித்தும் பயிற்சி அளிக்க வேளாண் அறிவியல் நிலையம் முடிவு செய்துள்ளது.
தமிழகம் முழுவதும் தற்போ து ஐந்தாயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் மட்டுமே மூலிகை பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக சேலம், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் அதிகளவு மூலிகை பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றில் முக்கியமாக கண்வலிக் கிழங்கு, கூர்கன், அவுரி போன்ற மூலிகை பயிர்கள் வணிக ரீதியாக அமோக வரவேற்பை பெற்றுள்ளது.
விவசாயிகளிடமிருந்து இவ்வகையான மூலிகை பயிர்களை பல தனியார் நிறுவனங்கள் போட்டிப் போட்டுக்கொண்டு கொள்முதல் செய்கிறது. இதன்மூலம் விவசாயிகளுக்கு குறைந்த செலவில் அதிகப்படியான வருமானம் கிடைக்க வழிவகை உள்ளது.
புதுக்கோட்டை மாவட்டத்தில் மூலிகை பயிர்கள் சாகுபடி செய்வதற்கு ஏற்ற சூழ்நிலைகள்

இருந்தும் குறைந்த அளவில் மட்டுமே இவை சாகுபடி செய்யப்படுகிறது. இதை அதிகரிக்கும் விதமாக விவசாயிகளுக்கு மூலிகை பயிர்கள் சாகுபடி குறித்த நவீன தொழில்நுட்ப பயிற்சி அளிக்க வேளாண் அறிவியல் நிலையம் முன்வந்துள்ளது.நாளை 10ம் தேதி காலை 10 முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ள பயிற்சி முகாமில் விவசாயிகளுக்கு மூலிகை பயிர்களின் வகைகள், அவற்றை சாகுபடி செய்வதற்கான வழிமுறைகள், சந்தை நிலவரம் குறித்து வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர்கள் பயிற்சி அளிக்கின்றனர்.மூலிகை பயிர்கள் சாகுபடியின் மூலம் அதிக லாபம்பெற விரும்பும் விவசாயிகள் பயிற்சி முகாமில் பங்கேற்கலாம்.

### கேரட்டை பதப்படுத்த முடியாமல் விவசாயிகள் பாதிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 08,2012,22:36 IST

கொடைக்கானல் : மண்ணிற்குள் விளையும் காய்கறிகளை கழுவி, பதப்படுத்துவதற்கென வசதியில்லாததால் கொடைக்கானல் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.
மலைப்பகுதியில் விளையும் காய்கறியில், அதிக சுவையும், அளவில் பெரியதாகவும் உள்ள கொடைக்கானல் கேரட்டிற்கு சந்தையில் தனி மவுசு உண்டு. பயிரிட்ட 90 நாளில் மகசூல் எடுக்கலாம். ஆண்டுதோறும் பயிரிடும் காய்கறி பட்டியலில் கேரட்டிற்கு முதலிடம்.
நோய்தாக்குதல் குறைவு, குறைந்த முதலீடு ஒரு புறம் இருந்தாலும், மண்ணிற்குள் விளையும் கேரட்டைபதப்படுத்தி சந்தைக்கு அனுப்புவதற்கு விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.
நிரந்தர நீர்த்தேக்கம், பாசன வசதியில்லாததால், தோட்டத்திலிருந்து எடுக்கப்படும் காய்கறிகளை கழுவுவதற்கு நீண்ட தூரம் தலைச்சுமையாகவும் கொண்டு செல்லவேண்டிய நிலை உள்ளது.
பெரும்பாலான விவசாயிகள் கழுவாமல், மண்ணோடு அனுப்புவதால் விலையும் குறைகிறது.
இந்தாண்டு விளைச்சலில் பாதிப்பு இல்லை. தற்போது ஒரு சிப்பம் கேரட் (50 கிலோ) 300ரூபாய் விற்கிறது.
தோட்டக்கலை உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில்,"அட்டுவம்பட்டி, பூம்பாறை, மன்னவனூரில் மண்ணிற்குள் விளையும் காய்கறியை கழுவுவதற்கென இயந்திரம் பொருத்தபடவுள்ளது.
இதற்கான நிதி கேட்டுள்ளோம். கிடைத்தவுடன் விரைவில் சரிசெய்யப்படும்,' என்றார்.

### மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயத்துறை யோசனை

பதிவு செய்த நாள் : ஜூலை 08,2012,22:39 IST

பெரியகுளம் : பெரியகுளம் பகுதியில் பருத்தியை தாக்கும், மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

பெரியகுளம், வடுகபட்டி, ஜெயமங்கலம் பகுதிகளில் நூறு ஏக்கரில் சுப்பிரியா ரகம், பண்ணி பி.டி. பருத்திகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த ரகங்கள் 60 முதல் 70 நாட்களில் விளைச்சலாகும். இவைகளில் மாவுப்பூச்சி தாக்குதல் பரவலாக உள்ளது. இலைகள் மஞ்சள் நிறமாகவும், குருத்துக்கள் சிறிதாகவும், கிளைகள் தண்டுப்பகுதிகள் வெள்ளை நிறத்தில் இருக்கும். ஆரம்பநிலையில் மாவுப்பூச்சிகள் பாதித்துள்ள பகுதியை கட்டுப்படுத்த, வரப்புகளை சுத்தமாகவும், களைகளை அகற்ற வேண்டும். பூச்சிகள் அதிகமாக ஒரு செடியில் இருந்தால் அந்த செடியை பிடுங்கி அழித்திட வேண்டும். சேதம் குறைவாக இருந்தால் 2 மில்லி லிட்டர் வேப்ப எண்ணெய்யை ஒரு லிட்டர் தண்ணீரில் ஊற்றி செடிகளில் தெளிக்கலாம், 20 கிராம் மீன் எண்ணெய் சோப்பை ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கலாம். பாதிப்பு அதிகமாக காணப்பட்டால், புரபனோபாஸ் 50 இ.சி. 2 மில்லியை, ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்,என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேனி உழவர்சந்தையில்சீரான விலையில் காய்கறிகள்

பதிவு செய்த நாள் : ஜூலை 08,2012,22:36 IST

தேனி : தேனி உழவர்சந்தையில் காய்கறி விலைகள் சீரான நிலையில் உள்ளன.
தேனி உழவர்சந்தைக்கு நேற்று 57 வகையான காய்கறிகளை 66 விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். வரத்து அதிகம் இருந்தாலும் விற்பனை நல்ல நிலையில் இருந்ததால், விலைகளும் சீரான நிலையில் இருந்தன.
நேற்றைய விலை நிலவரம் கிலோவிற்கு ரூபாயில்: கத்தரி- 15, அவரைக்காய்- 12, கொத்தவரை- 7, சுரைக்காய்- 7, புடலங்காய்- 20, பாகற்காய்- 24, பீர்க்கு- 20, முருங்கை- 20, பூசணி- 16, பச்சைமிளகாய் உருட்டு- 50, தேங்காய்- 5, பீட்ரூட்- 16, நூக்கல்- 20, முள்ளங்கி- 14, முருங்கைபீன்ஸ்- 42, பட்டர் பீன்ஸ்- 60, சோயா பீன்ஸ்- 55, செலக்ஷன் பீன்ஸ்- 25, முட்டைக்கோஸ்- 24, காரட்- 40, டர்னிப்- 25, சவ்சவ்- 20, காலிபிளவர்- 12, உருளை- 20, கருணை- 32, சேனை- 30, கருவேப்பிலை- 15, மல்லி- 20, புதினா- 25, சின்னவெங்காயம்- 35, பெல்லாரி- 14, இஞ்சி- 40, வெள்ளைப்பூடு- 30, கீரைவகைகள்- 5.

---

பருவமழை பொய்த்ததால் விவசாயிகள் கவலை பவானிசாகர் அணை வற்றும் அபாயம்

பதிவு செய்த நேரம்:2012-07-09 10:27:02

ஈரோடு: பருவமழை கைகொடுக்காததால் பவானிசாகர் அணை முற்றிலும் வறண்டு போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. போதியநீர் இருப்பு இல்லாததால் கீழ்பவானி பாசனத்துக்கு ஆகஸ்ட் 15ல் தண்ணீர் திறக்கப்படுமா என்ற சந்தேகம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

பவானிசாகர் அணை 1948ல் கட்டத் துவங்கி 1954ல் நிறைவு பெற்றது. அணை கட்டும் பணி நிறைவு பெற்ற அதே ஆண்டில் இருந்தே கீழ்பவானி (எல்பீபி.,) வாய்க்கால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. பவானிசாகர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15 முதல் ஏப்ரல் 30ம் தேதி வரை கீழ்பவானி வாய்க்காலில் திறக்கப்படும் தண்ணீரை கொண்டு நன்செய் மற்றும் புன்செய் பாசனத்துக்குட்பட்ட 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயனடைந்து வருகிறது. நன்செய் பாசனத்துக்கு 24 டிஎம்சி., புன்செய் பாசனத்துக்கு 12 டிஎம்சி., வீதம் ஆண்டுக்கு 32 டிஎம்சி., வரையிலும் தண்ணீர் திறக்கப்பட வேண்டும். தமிழக அளவில் டெல்டா பாசனத்துக்கு பிறகு அதிகப்பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படும் பகுதியாக ஈரோடு மாவட்டம் கருதப்படுவதால் கீழ்பவானி பாசனம் உணவு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. அணையின் முக்கிய நீர்ப்பிடிப்பு பகுதிகளாக கருதப்படும் நீலகிரி மாவட்டம் மற்றும் கேரளாவிலும் தற்போது தென்மேற்கு பருவமழை சொற்ப அளவிலேயே பெய்கிறது. வழக்கமாக மே இறுதியில் துவங்கும் தென்மேற்கு பருவமழையின் உபயத்தால் ஆகஸ்ட் மாதத்திற்குள் அணையின் நீர்வரத்து கிடுகிடுவென உயர்ந்து விடும். பாசனம் துவங்கி 58 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் இதுவரை 8 முறை மட்டுமே கீழ்பவானி பாசனத்துக்கு உரிய பருவத்தில் அதாவது ஆகஸ்ட் 15ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்படவில்லை. ஆனால் இந்த ஆண்டு பவானிசாகர் அணையின் நீர்இருப்பு மிகவும் குறைவாக உள்ளதால் கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்குமா என்ற ஏக்கம் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து கீழ்பவானி பாசன விவசாயிகள் கூறியதாவது: 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 9ம் தேதி (நேற்று) மாலை 4 மணி நிலவரப்படி 40.65 அடியாக உள்ளது. அணைக்கு 914 கனஅடி நீர்வரத்து உள்ள நிலையில் ஆற்றின் வழியே 1150 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையில் தற்போது 2.5 டிஎம்சி., மட்டுமே நீர்இருப்பு உள்ளது. மீன்களை பாதுகாக்கவும், அணையின் நலனுக்காகவும் 1.5 டிஎம்சி., வரை

தண்ணீரை எடுக்க முடியாது. மீதமுள்ள 1 டிஎம்சி., நீரை இன்னும் 10 நாட்களுக்கு மட்டுமே விநியோகம் செய்ய முடியும். மிக சொற்ப அளவிலேயே அணையில் நீர் இருப்பு உள்ளநிலையில் தற்போது தடப்பள்ளி- அரக்கன்கோட்டை, காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்துக்கு தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஆற்றின் வழியே 1150 கனஅடி வீதம் தண்ணீர் செல்வதால் அணையின் நீர் இருப்பு தொடர்ந்து குறைந்து வருகிறது. இதேநிலை நீடித்தால் அணையில் உள்ள நீர்இருப்பை கொண்டு 10 நாட்கள் மட்டுமே நீர் விநியோகம் செய்ய முடியும் என்ற நிலை உருவாகும். எனவே நடப்பாண்டில் ஆகஸ்ட் 15 முதல் கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியுமா என்ற சந்தேகம் பெரும்பாலான விவசாயிகளுக்கு எழுந்துள்ளது.

பொதுப்பணித்துறையினரின் தவறான நீர்நிர்வாகம் காரணமாகவே இந்நிலை உருவாகியுள்ளது. கடைசியாக 2003, 2004ம் ஆண்டுகளில் அணையில் போதிய நீர்இருப்பு இல்லாததால் கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதேபோல இந்த ஆண்டிலும் கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுமா என்ற சந்தேகம் பவானிசாகர் அணையில் வெறும் 2.5 டிஎம்சி., மட்டுமே நீர்இருப்பு உள்ள நிலையிலும் தொடர்ந்து பவானிஆற்றின் வழியே 1150 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. ஆற்றின் வழியே தண்ணீர் திறக்கப்படும் போது பவானிசாகர் அணையில் இருந்து பவானி வரை ஆற்றின் இருப்புறங்களில் இருந்தும் திருட்டுத்தனமாக மெகா சைஸ் மோட்டார் மூலமாக நீர் உறிஞ்சப்பட்டு கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் திருடப்படுகிறது. பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு தெரிந்தே மோட்டார் பம்புசெட்டுகள் மூலம் தண்ணீர் திருடப்படுகிறது.

ஆற்றின் கரையில் புதர்போன்ற மறைவிடங்களில் வைக்கப்பட்டுள்ள மோட்டார் மூலமாக உறிஞ்சப்படும் ஆற்றுநீர் பூமிக்கடியில் புதைக்கப்பட்ட குழாய் மூலமாக பல கிலோ மீட்டர் தூரத்திற்கு கொண்டு சென்று பாசனத்துக்காக சில விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். ஆண்டு முழுவதும் இதேபோன்று விவசாயிகளால் தண்ணீர் திருடப்படுகிறது. மாவட்ட நிர்வாகம் தண்ணீர் திருடும் விவசாயிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே ஆயக்கட்டு விவசாயிகள் பாதிப்பிலிருந்து தப்ப முடியும்.